1975 அக்டோபர் 27]

மாக, அந்தக் குழுவிலே அரசாங்கச் சார்பில் சிலர் இடம் பெறுவார்கள். ஆகவே, நிர்வாகப் பொறுப்புகளிலே அரசாங்கத்திற்கும் ஓரளவிற்குப் பங்கு இருக்கும்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, பிற மாநிலக் கவிஞர்களை நாமும், நம் மாநிலமும் மதிப்பதைப்போல நம் தமிழ் நாட்டுக் கவிஞர்களை, புலவர்களை பிற மாநிலங்கள் மதித்து அவர்களுக்குக் கௌரவம் செய்யும் வகையில் இப்படிப்பட்ட நினைவாலயங்களை எழுப்பியிருக்கின்றனவா? அப்படிப்பட்ட முயற்சியில் நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ரவீந்தரநாத் தாகூர் அவர்களுக்கு நினைவாலயம் எழுப்ப, அகில இந்திய அரசே 1961 ஆம் ஆண்டு நூற்றாண்டு விழா நேரத்தில் முயற்சி எடுத்து, எல்லா மாநிலங்களுக்கும் இந்த உதவித் தொகையைத் தர முன் வந்ததன் காரணமாக நமக்கும் கிடைத்தது. இந்திய நாட்டைச் சேர்ந்த எந்த மொழி கவிஞரானாலும் அவரைப் போற்றி அவருக்கு நினைவுச் சின்னம் எழுப்புகிற பண்பாட்டை தமிழகம் தொடர்ந்து செய்கிறது. இதை மற்ற மாநிலங்கள் பின்பற்ற வேண்டுமென்பது நம்முடைய விருப்பம். மத்திய அரசு இதை வற்புறுத்த வேண்டுமென்பது நம் வேண்டுகோள்.

ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள்

* 67 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1975-76 ஆம் கல்வி ஆண்டில், ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் மாணவர்களை அனுமதித்திட அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆம். அதற்கான ஆணை 16—6—1975 நாளிலே அரசு பிறப்பித்துள்ளது.

* 68 வினா—**திரு. ஏ. சுப்பிரமணியம்:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள 57 அரசு ஆசிரியர் பயிற்சி நிலையங்களில் 29 நிலையங்களை மூடிவிடும்படி இவ்வாண்டு ஜூன் திங்கள் வாக்கில் அரசு ஆணை பிறப்பித்துள்ளதா?